# IN THE COURT OF II ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE, THANJAVUR

## DEPOSITION OF WITNESS

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Case No | : | SC. 348/2022 | Village | : | |
| Prosecution witness | : | PW- 2 | Taluk | : | |
| Name | : | திரு.சாதிக்பாட்ஷா | Occupation | : | |
| Father Name | : | திரு. முகமதுகனிப் | Age | : | |

**Solemnly affirmed in accordance with the provisions of Act of 1873 of the day of 04.08.2025.**

**A1 , A2, A3 present.**

அரசு தரப்பில் முதல் விசாரணை:

நான் கும்பகோணம், மேலக்காவேரி கதவு எண் 25/10 இல் இஸ்எம்பி நகரில் குடியிருந்து வருகிறேன். நான் மாடர்ன் டயர் கடை கும்பகோணம் சென்னை சாலையில் வைத்துள்ளேன். அ.சா. 1 கதீஜாபீவி எனது மனைவியாவார். அவருடன் பிறந்தவர்கள் முகமது ஆரிப், முகமதி அலி, முகமது காசிம், முகமது ரவிக் ஆகியோர் அதில் முகமது ரவீக் மனநிலை பாதிக்கபட்டவர். என் மாமியார் நுர்ஜகான் இறந்துவிட்டார். இறந்துபோன அப்துல்ரசாக் எனது மாமனார் ஆவார். அவர் ராஜகிரியில் கைலியும், ரெடிமேடு சட்டைகளும் அப்பன்னா சன்ஸ் என்ற பெயரில் கடை வைத்து நடத்தி வந்தார். அவருக்கு 7.4.2022 அன்று காலை நான் கடைக்கு போனபிறகு எனது மனைவி போன் செய்து அவருடைய அப்பா போன் எடுக்கவில்லைஎன்றும் என்னை போன் செய்து பார்க்கசொன்னார் நான் போன் அடித்தேன் அவர் எடுக்கவில்லை அந்த சமயத்தில் 10 நாட்களுக்கு முன்பு எனது மைத்துனர் முகமது ஆரிப் வெளிநாட்டிலிருந்து வந்திருந்தார். அவருக்கு போன் செய்து எனது மாமனாரை போய் பார்க்கசொன்னேன். எனது மாமனார் அவருடைய அப்பா ஆவார். அவர் போய் பார்த்துவிட்டு வீடு திறந்து கிடப்பதாகவும் என் மாமனார் குப்பற கிடப்பதாகவும் என் மனைவிக்கு போன் செய்து சொன்னார். அதன்பிறகு நாங்கள் புறப்பட்டு நெடுந்தெருவுக்கு போனோம். அப்போது அவர் இறந்துவிட்டதை தெரிந்து கொண்டேன். பாபநாசம் காவல்நிலையத்தில் இது தொடர்பாக புகார் கொடுத்தோம் அதன்பிறகு போலிஸார் விசாரித்தார்கள். வீட்டிலிருந்து 50000 பணம், 15 பவுன் நகை

காணவில்லை என்று என் மனைவி சொன்னார். அதன்பிறகு 10, 15 நாட்கள் கழித்து வீட்டில் திருடு போன சில சமான்களை போலிஸார் காண்பித்தார்கள். அதன்பிறகு அதை நீதிமன்றம் மூலம் பெற்றுகொள்ளுபடி சொன்னார்கள். போலிஸார் என்னை விசாரித்தார்கள்.

<u>1வது எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை</u>

நான் போவதற்குள் போலிஸார் வந்துவிட்டார்கள் என்றால் நாங்கள் போனபிறகுதான் வந்தார்கள். எனது மைத்துனர் புகார் கொடுக்கவில்லை என்றால் ஆமாம். நான் சொன்ன நாள் தேதியில் புகார் கொடுக்கவில்லை என்றும்,8.4.2022 அன்று போலிஸார் நாங்கள் ஆலோசனை செய்து எழுதி கொடுத்தபுகார் என்றால் சரியல்ல. அதைபோல் போலிஸார் என்னை விசாரிக்கும்போது என்னிடம் பொருட்களை காட்டி நான் அடையாளபடுத்தியதை சொல்லவில்லை என்று சொன்னசால் சரியல்ல.

<u>3வது எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை</u>

புகார் கொடுக்க நான் மனைவியுடன் போனேனா என்றால் போனேன். புகாரில் என்னஎன்ன நகை காணாமல் போனது என்று என் மனைவி சொன்னரா என்றால் சொன்னார். போலிஸார் என்னிடம் சில சமான்களை காண்பித்ததாக சொல்கிறேனே அப்போது அதைபோல் உள்ள மற்ற சமான்களை கலந்து வைத்து காண்பிக்கசொன்னரா என்றால் இல்லை. சையத் முகமது, அப்துல் ரசிக் ஆகியோருக்கு சம்மந்திகாரர் என்றால் இல்லை. அவர்களும் எங்களுடன் காவல்நிலையத்திற்கு நகையை காண்பிக்க வந்தார்கள் என்றால் இல்லை.

<u>2வது எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை</u>

இல்லை.

நான் சொல்ல என் உத்திரவுப்படி
தட்டச்சிடப்பட்டு, என் முன்னிலையிலும்,
மேற்பார்வையிலும், சாட்சிக்குப் படித்துக்
காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று
ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒம்/- ப ,நாகராஜன்)
2வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
தஞ்சாவூர்.